முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 627**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.06.2021, வியாழக்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
தரணி காத்திடும் தேசிகனே
புவனம் வெல்ல சன்மார்க்கம்தன்னை
புண்ணியவழியோடு உலகோர்க்குஅருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர்யானும் இனிதே ஞானஅறிவுரைஆசி
வரங்களென உன்படை உலகை வெல்லும்
வல்லமைபட உன்தர்மம் உலகை மீட்கும்
3. மீட்புதந்து காக்க முருகப்பெருமான் யானும்
மேலான சக்தியூட்டி உன்வழி அருள
ஏற்புகொண்டு உலகோர் தொடர்ந்து உன்வழிவரவர
இந்தவையகம் மாற்றம் பெறும்
4. மாற்றமொடு பாதுகாப்புமிக்க நல்லுலகமாகி
மகான்உன்வழி ஞானியர் படைகூடி
ஆற்றல்பட கலியின்துன்பங்கள் விரண்டோடி
அகிலம் சடுதி ஞானலோகமாகும்
5. ஆகவே அரங்கனே கலியின் சிறந்தஞானி
அவதாரம் புரிந்த என்சூட்சும யோகி
வகைபட உலகோர் வணங்கி வர
வையகத்தில் தர்மபலம் கூடி இனிதே
6. இனிதே கலியுகம் வலுவிழந்து
இனிவருங்காலம் ஞானயுகமாக மாற்றம்
கனிவுபட அரங்கன் அருளாளும்
கருணைகொண்ட அரங்கன் சேவையாலும்
7. சேவையாலும் உலகமாற்றம் சடுதிகாணும்
சிறப்பான ஞானவான்கள் ஆட்சியாக மாறும்
மறுப்பின்றி ஏற்றுவர உலகோர்க்கு
மரணமில்லாத பெருவாழ்வும் உறுதியாகும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.